**எம்பிலிபிடிய பிரதேச சபை - 2020**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எம்பிலிபிடிய பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும்எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் எம்பிலிபிடிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட கூட்டுத் தொகை ரூபா 8,516,530 ஆன அபிவிருத்தி கருத்திட்ட செலவினங்கள் மூலதனமாக்கப்பட்டு இருக்கவில்லை. | எதிர் வரும் கணக்காண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | அபிவிருத்தி கருத்திட்ட கிரயம் மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கடந்த ஆண்டு கடன்கொடுனர் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 1,995,017 ஆன வேலை ஒன்றின் பட்டியல்கள் மீளாய்வாண்டினுள் தீர்க்கையில் அப் பெறுமதி செலவின பேரேட்டிற்கு பிரதியிடலினூடாக ஆண்டின் மூலதன செலவு மற்றும் ஆண்டிறுதியில் கடன்கொடுனர் ரூபா 1,995,017 கூடுதலாக காட்டப்பட்டிருந்தன. | எதிர் வரும் கணக்காண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | கணக்காண்டிற்கு உரிய செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | 2019 திசெம்பர் 19 திகதி உடன்படிக்கை செய்யப்பட்ட மீளாய்வாண்டு இறுதி வரை மேற்கொள்ளப்படாத வேலை ஒன்றிற்காக மீளாய்வாண்டிற்காக கடன்கொடுனர் ஏற்பாடு செய்யப்பட்டதில் ஆண்டின் மூலதன செலவு மற்றும் ஆண்டிறுதித் திகதிக்கு கடன்கொடுனர் ரூபா 1,040,340 கூடுதலாக காட்டப்பட்டிருந்தன. | எதிர் வரும் கணக்காண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | கணக்காண்டிற்கு உரிய செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டினுள் மேற்கொண்ட ரூபா 1,357,525 ஆன வீதி விளக்கு உபகரணங்களை கொள்வனவு செய்யும் மீண்டுவரும் செலவுகள் தளபாடங்கள் மற்றும் பொருத்துக்களின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தன. | எதிர் வரும் கணக்காண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | மீண்டுவரும் செலவுகள் மற்றும் மூலதன செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (உ) | ஆண்டினுள் கொள்வனவு செய்து மூலதனமாக்கியிருந்த ரூபா 88,800 ஆன நிலையான சொத்துக்கள் நிதி செயலாற்றல் கூற்றினுள் மீண்டுவரும் செலவாக பதிவழித்திருந்ததால் ஆண்டின் செயற்பாட்டு மிகை ரூபா 88,800 தொகை குறைத்து காட்டப்பட்டிருந்தது. | எதிர் வரும் கணக்காண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | மீண்டுவரும் செலவுகள் மற்றும் மூலதன செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டிற்கான காப்புறுதி இழப்பீட்டு பெறுவனவை வருமானமாக இனங்காணாது நானாவித வைப்பு கணக்கில் செலவு வைத்ததில் ஆண்டிற்கான செயற்பாட்டு வருமானம் ரூபா 103,500 குறைத்தும், ஆண்டிறுதியில் நடைமுறை பொறுப்பு அதற்கு சமமான அளவினால் கூடுதலாகவும் காட்டப்பட்டிருந்தன. | காப்புறுதி இழப்பீட்டுத் தொகைக்குரிய வாகனத்தின் திருத்த வேலைகளிற்கான பட்டியல்களிற்கு கொடுப்பனவு செய்யும வரை இப்பணத்தை வைப்பாக கருதி நடவடிக்கை எடுத்துள்ளதாக. | கணக்காண்டிற்கான வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (எ) | 2019 ஆண்டு மாகாண சபை ஒதுக்கீட்டின் கீழ் கிடைத்த ரூபா 337,534 கிரயமான மருந்துகளின் இருப்பு ரூபா 737,534 ஆக பேரேட்டிற்கு பிரதியிட்டதால் ஏற்பட்ட தவறை சரிசெய்யாததன் காரணமாக ஆண்டிறுதியில் ஆயுர்வேத களஞ்சிய இருப்பு மீதி மற்றும் திரண்ட நிதியத்தின் மீதி ரூபா 400,000 இனால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தன. | எதிர் வரும் கணக்காண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | சரியான இருப்புப் பெறுமதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டிற்குரிய முத்திரை கட்டணம் வருமானம் பண அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல் செய்திருக்கவில்லை. | எதிர் வரும் கணக்காண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | கணக்கீட்டு கொள்கைகளிற்கு மாற்றம் இடம்பெற்றிருப்பின் அதனை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். |
| (ஐ) | நிர்மாண பொருட்களை விநியோகித்தமைக்கு நிறுவனமொன்றிற்கு செலுத்த வேண்டிய ரூபா 1,308,730 ஆன பணத்தை செலுத்தாததற்காக மீளாய்வாண்டு இறுதி வரை நிரைவு பெறாது சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கொன்று தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.<br>எவ்வாறாயினும் இவ்வழக்கிற்காக 2021 ஆண்டு இறுதியில் ரூபா 461,500 ஆன சட்டக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. | எதிர் வரும் கணக்காண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | நிதியாண்டு இறுதித் திகதியில் காணப்படும் எதிர்பாரா பொறுப்பு தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல் செய்ய வேண்டும். |

**1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்ககுகள் அல்லது அறிக்கைகள்**

| விடயம் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| 08 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியில் நிதிக்கூற்றுகள் பிரகார மீதி மற்றும் துணை பதிவேடுகள் பிரகார மீதிகளிற்கிடையில் ரூபா 11,651,579 ஆன வித்தியாசம் நிலவியது. | முன்னைய ஆண்டுகளில் இருந்து நிலவி வரும் இவ் வித்தியாசத்திற்கு காரணத்தை கண்டறிந்து எதிர் வரும் கணக்காண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் மீதிகள் அதற்கு உரிய துணை பதிவேடுகளுடன் இணங்க வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை**

| விடயம் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| கூட்டுத்தொகை ரூபா 406,758,583 ஆன 06 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | விரிவான அட்டவணையை எதிர்காலத்தில் தயாரிப்பதாக. | விரிவான அட்டவணைகள் மற்றும் காலப் பகுப்பாய்வுகளை தயாரிக்க வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 25,153,522 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 18,534,795 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- | --- |
| | வீதவரி மற்றும் குத்தகை | | |
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 4,773,619 ஆன நிலுவை வீதவரியினை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எம்பிலிபிடிய கடதாசித் தொழிற் சாலையிலிருந்து 2017 திசெம்பர் 31 திகதி வரை அறவிட வேண்டியுள்ள ரூபா 730,247.73 ஆன வீதவரியை திறைசேரியால் அறவிட மாகாண சபையினால் பரிந்துரைத்துள்ளதாகவும், 2020 ஆண்டில் நிலவிய கொவிட் 19 தொற்று நிலமையை சந்தித்ததால் இந் நிலுவை மீதியை அறவிட ஆதனத் தடை செய்யாததுடன் 2021 ஆண்டில் அந்நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாக. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 03 நீர் கருத்திட்டங்களிலிருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 திததியில் கிடைக்க வேண்டிய ரூபா 879,003 ஆன நீர் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஒரு நீர் கருத்திட்டம் ஓராண்டை விஞ்சி காலமாக செயலிழந்து காணப்படுவதால் நீர் விநியோகம் மீண்டும் வழங்கியதன் பின்னர் நிலுவையை அறவிட நடடிவக்கை எடுப்பதாகவும், ஏனைய இரண்டு நீர் கருதித் திட்டங்களில் எதிர்வரும் கணக்காண்டில் நிலுவை நீர் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுப்பதாக. | சபைக்கு உரிய வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 1988 ஆகஸ்ட் 23 திகதிய 520/7 இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் iv (ஆ) பிரிவின் 05 இலக்கத்தின் கீழ் உள்ள துணை சட்டம் பிரகாரம் சபை அதிகார எல்லையிலுள்ள 25 அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும் அவ்வாறான அனுமதியற்ற நிர்மாணங்களை இனங்காண மற்றும் அகற்ற முறையான வேலைத் திட்டமொன்றை செயற்படுத்தி இயிருக்கவில்லை. மேலும், அனுமதியற்ற நிர்மாண பதிவேடொன்றை நடாத்தியிருக்கவில்லை. | வருமான பரிசோதகர்கள் மற்றும் தொழிநுட்ப உத்தியோகத்தர்களினால் அனுமதியற்ற நிர்மாணங்களை இனங்காண திட்டமிட்டுள்ளதாகவும், அதன் பிரகாரம் அனுமதியற்ற பதிவேடொன்றை நடாத்த நடவடிக்கை எடுப்பதாக. | தொடர்புடைய பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2020 ஆண்டிற்காக சபைக்கு சொந்தமான 07 வாராந்த சந்தைகளை குத்தகை வழங்கையில் டென்டர்தாரர்கள் திட்டமிட்டவாறு உடன்படிக்கை செய்ய முன்வராததனூடாக டென்டர் பணத்தை குறைக்க செல்வாக்கு செலுத்தியிருந்ததாக அவதானிக்கப்பட்டது. 2019 ஆண்டுடன் ஒப்பிடுகையில் வாராந்த சந்தைகளை குத்தகை வழங்குவதனூடாக மீளாய்வாண்டில் இழக்கப்பட்ட வருமானம் ரூபா 1,599,000 ஆனது. | கணக்காய்வின் சுட்டிக் காட்டளை ஏற்பதாகவும், 2018 ஆண்டளவில் வாராந்த சந்தைக்கான அதிக போட்டி காரணமாக வாராந்த சந்தைக்காக மிகை மதிப்பீடு ஏற்பட்டு குத்தகைதாரர்கள் வியாபாரிகளிடமிருந்து கூடுதலான கட்டணம் அறவிடல் சந்தை குத்தகைதாரர்களினால் சிறிய மரக்கறி வியாபார நிலையங்கள் உருவானமை போன்ற காரணங்களால் வாராந்த சந்தை வியாபாரிகள் குறைந்ததால் இப் பணத்தை அறவிட முடியாது என ஆதங்கம் முன்வைக்கப்பட்டதாக. | முறையான டென்டர் நடைமுறை ஒன்றை பின்பற்றுவதனூடாக வாராந்த சந்தைகளை குத்தகை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |